# "இலங்கை முஸ்லிம் பெண்களின் தலைமைத்துவம்: ஒரு மெய்யியல் பகுப்பாய்வு'

**Supervisor**
*Mr. ML. Issadeen,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. MI. Fathima Susan Shinas,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

## ஆய்வுச் சுருக்கம்

தலைமைத்துவம் என்பது பிறப்பிலிருந்து ஒருவருக்குள் நிலைத்திருக்கும் ஆளுமைத் தன்மை என்றே நம்பப்படுகின்றது. ஆனால் உண்மையில் தலைமைத்துவம் என்பது பல்வேறு சந்தர்ப்பங்களாலும் நபர்களாலும் உருவாக்கப்படுகின்றது என்பதை அறிவதில்லை இவ்வுருவாக்கங்களின் போது இனம், மதம், மொழி, நிறம், பால், நாடு, நகரம் என்கின்ற வேற்றுமைகள் களையப்பட்டு வேறுபாடுகளுக்குள் ஒரு இணைவைக் காணமுடியுமாயிருக்கும். அந்தவகையில் பெண்களின் தலைமைத்துவம் என்பது இன்று உலகெங்கும் வியாபித்திருக்கின்றது என்பது கண்கூடு. இந்தியாவின் ஜனாதிபதி பிரதிபா பட்டேல், பங்களாதேஷ் பிரதமர் ஷேய்க் ஹசீனா, பிரித்தானியா எலிசபத் மகாராணி, ஐ. நா. மனித உரிமைகளுக்கான ஆணையாளர் திருமதி நவநீதம் பிள்ளை என பலர் கலை, இலக்கியம், மருத்துவம், விஞ்ஞானம், ஆய்வுகள், தொழிநுட்பம் என பல்வேறு துறைகளிலும் தம் திறமைகளால் தலைமைத்துவத்தை வெளிப்படுத்தத் தவறவில்லை. இத்தகைய பெண்தலைமைத்துவக் கருத்துக்கள் பரவலாக பேசப்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலப் பகுதியில் தலைமைத்துவத்தினை இலங்கை முஸ்லிம் பெண்கள் ஏற்று நடக்கின்றனரா? இஸ்லாமிய பெண் தலைமைத்துவம் வகிப்பதை வீடு, சமூகம், சமயம், உலகம் என்பன ஆதரிக்கின்றதா? இஸ்லாத்தில் பெண் தலைமைத்துவம் பற்றிய உண்மையான நோக்கு என்ன? முஸ்லிம் பெண்கள் தலைமைத்துவம் வகிப்பதனால் இன்று எத்தகைய சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பன இவ்வாய்வு தொடர்பான பிரச்சினைகளாகும். மேலும் இவ்வாய்வினூடாக இலங்கை முஸ்லிம் பெண்கள் தலைமைத்துவத்தினை ஏற்பதனால் சமூகமும் பெண்களும் அடையும் நன்மைகள், தீமைகள், பெண்களின் தலைமைத்துவம் தொடர்பான கருத்துக்களுக்கும் இலங்கை முஸ்லிம் பெண்களின் தலைமைத்துவம் தொடர்பான கருத்துக்களுக்கும் இடையிலான ஒற்றுமைகள், வேற்றுமைகள் ,பிரச்சினைகள் என்பவற்றை அறிந்து கொள்ளல் போன்ற நோக்கங்கள் அடையாளப்படுத்தப்பட்டன. இவ்வாறான நோக்கங்களை அடையும் பொருட்டு, முதலாம் நிலைத் தரவு மூலங்களையும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களையும் மற்றும் தொகுத்தறி ஆய்வு முறைகளையும் அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை முஸ்லிம் பெண்கள் சமூகத்தில் காணப்படுகின்ற ஆணாதிக்கச் சிந்தனைகள், பால்நிலை சமத்துவமின்மை, பெண்களின் உரிமை மறுப்பு, பெண்கள் மீதான வன்முறை போன்ற காரணிகளினால் பெண்தலைமைத்துவம் பற்றி கருத்துக்களுக்கு உட்பட்டிருந்ததை அறியமுடிகின்றது என்பதனால் பெண்தலைமைத்துவக் கருத்துக்கள் முஸ்லிம் பெண்கள். மத்தியில் ஒருமித்த தன்மையும், வேற்றுமைப் போக்கும் காணப்படுகின்றது என்பது இவ்வாய்வின் மூலம் தெளிவாகியது. அத்துடன் பெண்தலைமைத்துவம் பற்றி பூரணமாக அறிவதற்கும் செயற்படுவதற்கும் எவ்வாறான தடைகள் உள்ளது என்பதையும் அறிந்து கொண்டேன்.

**Key words:** பெண், தலைமைத்துவம், பெண்தலைமைத்துவம், பிரச்சினை